# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: ஆறு






சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 ஆனி 24 ஞாயிற்றுக்கிழமை (08.07.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 201


# சமாதான அனுசரணை பணிக்கு பிரிட்டன்-ஜேர்மன் கூட்டுத்தலைமை

## அடுத்த மாதம் நடுப்பகுதியில் சமாதான முயற்சி ஆரம்பம்?

(கொழும்பு)

**இலங்கையின் அமைதி முயற்சிகளின் அனுசரணைப் பணியை இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் கூட்டாக மேற்கொள்வதற்கு திட்டமிட்டுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. இதனடிப்படையில் பிரித்தானியாவும், ஜேர்மனியும் கூட்டாக தலைமை வகிக்கும் என்றும் கூறப்படுகிறது.** (06 ஆம் பக்கம் பார்க்க)

## ஆணைக்குழுவின் நடவடிக்கைகளின்போது பிரதிநிதி பங்குபற்ற பகவதி இணக்கம்

(கொழும்பு)

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் நடவடிக்கைகளின் போதும் செயற்குழுக் கூட்டத்தின் போதும் தமது பிரதிநிதி ஒருவரை பங்குபெறச் செய்வதற்கு பிரபலமான நபர்களை கொண்ட சர்வதேச சுயாதீன ஆணைக்குழுவின் தலைவரும் இந்திய முன்னாள் தலைமை நீதிபதியுமான பி.என்.பகவதி இணக்கம் தெரிவித்துள்ளதாக ஹிந்துஸ்தான் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

முன்னதாக ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் செயற்பாடுகள் மிக மெதுவாக இடம் பெறுவதாகவும் சாட்சிகளைப் பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் குற்றஞ்சாட்டிய பகவதி விசாரணைகள் (06 ஆம் பக்கம் பார்க்க)

## அதிபர் பதவிஉயர்வு நேர்முகப்பரீட்சை வடக்கில் தொடர்ந்து நடைபெறும்!

### வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அறிவிப்பு

இலங்கை அதிபர் சேவை தரம்III ற்கான நேர்முகப் பரீட்சை வடக்கு மாகாணத்தில் தொடர்ந்து நடைபெறுமென வட மாகாண கல்வியமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். வகுப்பு 2 தரம் II மற்றும் தரம் III ற்கான போட்டிப்பரீட்சை முடிவுகள் பரீட்சைத் திணைக்களத்தால் கல்வியமைச்சுக்கு வழங்கப்பட்டபோது கல்வி அமைச்சின் கணனித் தரவுகளில் ஏற்பட்ட கோளாற்றினால் தவறுகள் ஏற்பட்டுள்ளன.

பதவி உயர்விற்காக விண்ணப்பித்து போட்டிப் பரீட்சைக்கு அழைக்கப்படாதவர்களின் விபரமும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களின் தரவுகளிற்குள் சேர்ந்துகொள்ளப்பட்டதாக கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை போட்டிப்பரீட்சைக்கு தோற்றாமல் நேர்முகப்பரீட்சையில் மாத்திரம் தோற்றினால் புள்ளிகளின் அடிப்படையில் பதவி உயர் கிடைக்காது எனவும் அவ் அதிகாரி குறிப்பிட்டார். அத்துடன் திட்டமிட்டபடி அனைத்து மாகாணங்களிலும் நேர்முகப் பரீட்சை நடைபெறும் எனவும் அவர் கூறினார்:

(ச-5)

## மட்டக்களப்புத் தாக்குதலில் 15 விடுதலைப்புலிகள் உயிரிழப்பு

### இராணுவம் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு தொப்பிக்கலப் பகுதியில் விடுதலைப்புலிகளுக்கு எதிராக தொடருகின்ற இராணுவ நடவடிக்கையின்போது தாம் 15 விடுதலைப்புலிகளை கொன்றதாக இலங்கை இராணுவம் கூறுகிறது. நேற்று முன்தினம் மாலை விடுதலைப்புலிகள் பயணம் செய்த இரண்டு உழவு இயந்திரங்கள் மீது இராணுவ விசேட கமாண்டோ படையினர் நடத்திய தாக்குதலில் இந்த 15 பேரும் கொல்லப்பட்டதாக அவர்கள் கூறியுள்ளனர்.

நேற்றுக் காலையில் அந்தப் பகுதியில் நடாத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது அவர்களது சடலங்கள் கண்டெடுக்கப்பட்டதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இச் சம்பவம் குறித்து விடுதலைப்புலிகள் கூறுகையில், இந்தச் சம்பவம் இடம் பெற்றதை உறுதிப்படுத்தியதுடன், ஆயினும் இராணுவத்தினர் கூறும் அளவிற்கு தமக்கு இழப்பு ஏற்படவில்லை என்றும் இரு தரப்பிலும் இழப்பு ஏற்பட்டதாகவும் தெரிவித்துள்ளனர்.

(ச-5)

## சாவகச்சேரியில் இளைஞன் சுட்டுக்கொலை

சாவகச்சேரி டச்சு வீதியில் நேற்று முன்தினமிரவு இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். இச் சம்பவத்தில் உயிரிழந்தவர் சங்கத்தானை கந்தசாமிகோவிலடியைச் சேர்ந்த விஜயகுமார் சதீஸ்குமார் (வயது 22) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கடையொன்றின் முன்னால் பிரஸ்தாப இளைஞன் நின்றிருந்தபோது இச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்குச் சென்ற சாவகச்சேரி நீதிவான் விசாரணைகளை மேற்கொண்டார். பிரேத பரிசோதனைக்காக சடலம் யாழ்.போதனாவைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(ச-5)

## கிழக்கில் தேர்தல் நடாத்தினால் வன்முறை வெடிக்கும் அபாயம்

### மட்டு.ஆயர் எச்சரிக்கை

(மட்டக்களப்பு)

கிழக்கில் தேர்தல்களை அரசாங்கம் நடத்தினால் வன்முறை வெடிக்கும் நிலைமை ஏற்படும் என்று மட்டக்களப்பு-திருகோணமலை மாவட்ட ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை எச்சரித்துள்ளார். இது தொடர்பில்" பி.பி.ஸியின் சிங்கள சேவையான சந்தேசியவுக்கு அவர் அளித்த நேர்காணலில் கூறியுள்ளதாவது;

கிழ்க்கில் நிலைமை சற்றுப் பரவாயில்லை. ஆனால் பிரச்சினைகள் இன்னமும் உள்ளன. கிழக்கின் பெரும் பகுதி இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளன. ஆனால் மட்டக்களப்பின் மேற்குப் பகுதியில் தொடர்ந்து தமிழீழ விடுதலைப்புலிகளுடன் மோதல் நடைபெற்று வருகின்றது.

தற்போதைய பாதுகாப்பு நிலைமைகளால் நியாயமான நீதியான தேர்தல் நடைபெறாது என்பதே எமது கருத்து. தேர்தல் நடத்தினாலும் வன்முறைகள் நிகழாது எனக்கூறமுடியாது. தேர்தல் (06 ஆம் பக்கம் பார்க்க)

# நியாயமான அரசியல் தீர்வை பேசிப் பெற முடியும் என நினைப்பது சாத்தியமற்றது

## விடுதலைப்புலிகள் ஏடு

(கிளிநொச்சி)

இனவாதச் சித்தாந்த அரசியலை அடித்தளமாகக் கொண்ட அரசிடமிருந்து தமிழ் மக்கள் ஒரு நியாயமான அரசியல் தீர்வைப் பேசிப்பெற முடியும் என்று நினைப்பது சாத்தியமற்றதேயாகும் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ ஏடான விடுதலைப்புலிகள் ஏடு தெரிவித்துள்ளது.

விடுதலைப்புலிகள் ஏட்டின் (குரல் எண் 136) தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, சிங்கள அரசிடம் நிரந்தரமான ஒரு அரசியல் சித்தாந்தம் உண்டு. இலங்கைத் தீவு சிங்கள பௌத்தர்களுக்கு மட்டுமே உரித்தான நிலம் என்பது அந்தச் சித்தாந்தமாகும்.

சிங்கள பௌத்தர்களைத் தவிர வேறு எந்த இன மக்களுக்கும் இலங்கைத்தீவில் இடமில்லை என்று அந்த இனவாதச்சித்தாந்தம் கூறுகின்றது. சிங்களத்தின் எந்தக்கட்சி அல்லது எந்தத் தலைவர் ஆட்சிப்பொறுப்புக்கு வந்தாலும் இந்த இனவாத அரசியல் சிந்தாந்தத்தில் மட்டும் மாற்றமிருக்காது.

சிங்கள பௌத்த பேரினவாத சித்தாந்தத்தின் முதலாம் எதிரியாக தமிழினமே உள்ளது. தமிழ் மக்களும் தமிழரின் தாயக நிலமும் அதன் தொடர்ச்சியானதும் குரூரமானதுமான தாக்குதல்களுக்கு இடைவிடாது முகம் கொடுத்தே வருகிறது.

தமிழின அழிப்பு என்பது அதன் தாரக மந்திரமாக இருந்து வருகிறது. முன்னர் இனக்கலவரங்கள் என்ற பெயர்களில் காலத்துக்குக் காலம் தமிழின அழிப்புக்களைச் செய்து வந்தார்கள். இப்போது பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்ற போர்வையில் இன அழிப்பை அவர்கள் செய்து வருகின்றனர்.

உள்நாட்டில் (06 ஆம் பக்கம் பார்க்க)


நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



# கிழக்கை முழுமையாகக் கைப்பற்றிய பின் அரசின் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன?

## ரணில் விக்கிரமசிங்க கேள்வி

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தை முழுமையாகக் கைப்பற்றியதன் பின்னர் அரசாங்கத்தின் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்று கேட்கின்றோம். தொடர்ந்து கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு பகுதிகள் மீது தாக்குதல் நடாத்திப் புலிகளின் தலைவர் பிரபாகரனை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா? அல்லது சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுமா? என்று அரசாங்கம் மக்களுக்குக் கூற வேண்டும்.

நாட்டு மக்களுக்கு உண்மையைக் கூறுமாறு ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்திடம் கோரிக்கை விடுகின்றோம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கம்பஹாவில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியதாவது;

அரசாங்கத்தின் ஊழலுக்கும் மோசடிக்கும் எதிராக ஐக்கிய தேசியக் கட்சி எதிர்வரும் 26 ஆம் திகதி கொழும்பில் மேற்கொள்ளவுள்ள ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவு வழங்குமாறு கோரிக்கை விடுகின்றேன்.

1977 ஆம் ஆண்டு நாங்கள் பாரிய அரசியல் வெற்றியைப் பெற்று முப்பது வருடங்கள் கடந்து விட்டன. தற்போது 2007 ஆம் ஆண்டில் இருக்கின்றோம். அந்த வகையில் அடுத்த 30 வருடங்களுக்கு அரசாங்கத்தை அமைப்பதற்காக நாம் செயற்பட வேண்டும்.

வடக்குக் கிழக்குப் பிரச்சினைக்கு யுத்தத்தின் மூலம் தீர்வு காண முடியாது என்று கூறிய அரசாங்கம் தற்போது அரசியல் தீர்வு குறித்து அவதானம் செலுத்தியுள்ளது. ஆனால் அரசியல் தீர்வின் மூலமே பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்ற நிலைப்பாட்டில் ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ந்து இருக்கின்றது.

புலிகளுடன் பேச்சு நடாத்திப் பயனில்லை என்றும் முதலில் கிழக்கைக் கைப்பற்றிவிட்டுப் பின்னர் கிளிநொச்சி சென்று பிரபாகரனை அழிக்க வேண்டும் என்றும் அதன் பின்னர் அரசியல் தீர்வு குறித்துச் சிந்திக்க வேண்டும் என்றும் அரசாங்கம் இவ்வருட ஆரம்பத்தில் கூறியது.

பிரபாகரனைப் பிடித்துத் தருபவர்களுக்குச் சன்மானமாக நிதி வழங்கப்படும் என்றும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். அன்று அவ்வாறு கூறிய ஜனாதிபதி சகோதர நிறுவனம் இன்று பேச்சுக்குப் புலிகளை அழைப்பதற்காகவே தாக்குதல் நடாத்துவதாகத் தெரிவித்துள்ளது.

இவ்வாறு அரசாங்கம் இரண்டு நிலைப்பாடுகளைத் தெரிவித்துள்ளது. ஆனால் எந்தவழி பின்பற்றப்படும் என்று தெளிவாக அறிவிக்கப்பட வேண்டும். தற்போது தொப்பிக்கலப் பற்றி பேசப்படுகின்றது. அதன் பின்னர் என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்படவில்லை.

10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கிழக்கிற்கு அனுப்பப்பட்டுள்ளனர். அதாவது யாழ்ப்பாணத்திலிருந்த இராணுவத்தினர் கிழக்கிற்கு அனுப்பப்பட்டுள்ளனர். இதனால் கிழக்கில் இராணுவ பலம் அதிகரித்திருந்தாலும் வடக்கில் இராணுவ பலம் குறைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் வன்னியிலிருந்து வவுனியா நோக்கிப் புலிகள் தாக்குதல் நடாத்துகின்றனர். நெடுந்தீவு மற்றும் முகமாலைப் பகுதிகளுக்குத் தாக்குதல் மேற்கொள்ளப்படுகின்றன. அரசாங்கத்தின்செயற்பாடுகளால் இராணுவம் சிறைப்பட்டுள்ளதாக இராணுவ வீரர்கள் வெளிநாட்டு ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளனர்.

தற்போது என்னிடம் சில கேள்விகள் உள்ளன. அதாவது கிழக்கை மீட்ட பின்னர் கிளிநொச்சி மீது தாக்குதல் நடாத்தி பிரபாகரனைப் பிடிப்பதா? அல்லது சமாதானப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதா? இதற்கு அரசாங்கம் தெளிவான பதில் கூற வேண்டும்.

பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு நாம் ஆதர்வு வழங்குவோம். ஐ.தே.க. உட்பட இடதுசாரிக் கட்சிகள் பேச்சுவார்த்தை நடாத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்துகின்றன.

எனவே அடுத்தகட்ட நடவடிக்கை என்ன என்று அரசாங்கம் கூற வேண்டும். ரணசிங்க பிரேமதாச தலைமையில் நாங்களும் யுத்தம் செய்தோம். புலிகளைப் பேச்சு மேசைக்குக் கொண்டு வருவதற்காக யுத்தம் செய்தோம். கிழக்கைக் கைப்பற்றிக்கொண்டு வன்னியிலும் ஒருபகுதியை கைப்பற்றிக் கொண்டு புலிகளைப் பேச்சு மேசைக்கு அழைத்தோம் என்றார். (ச-5)

# கண்டியில் கப்பம் பெற்று வந்த கும்பல் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது

(கொழும்பு)

ஆட்களைக் கடத்தி கப்பம் பெற்று வந்த கும்பல் ஒன்றைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று முன்தினம் கண்டியில் வைத்துக் கைது செய்துள்ளனர்.

இக்கடத்தல் கும்பலைக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசேட குழுவொன்றே பிடித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பாக 12 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் கண்டியிலுள்ள பிரயாண முகவர் அமைப்பை நடத்தி வரும் முஸ்லிம் வர்த்தகரைக் கடத்தி ரூபா 22.5 மில்லியன் கப்பம் பெற்ற குற்றநடவடிக்கையில் சம்பந்தப்பட்டவர்கள் இவர்கள்தான் எனவும் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பிரதிப் பொலிஸ் மா அதிபர் டி.டபிள்யு.பிரதாப்ப சிங்க தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டுள்ளவர்கள் பல வர்த்தகர்களைக் கடத்திக் கப்பம் பெற்றுள்ளதாகவும் இந்தக் குழுவின் தலைவன் மத்திய மாகாணப் பிரதேசத்திலேயே இவ்வாறான அதிகளவு குற்ற நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இந்தக் குழுவின் தலைவன் தற்போது நாட்டை விட்டுத் தப்பிச் சென்றுள்ளதாகவும் இவன் தற்போது மத்திய கிழக்கு நாடொன்றில் இருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகின்றது.

குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவல்களின்படி கப்பமாகப் பெற்ற பணத்தில் ஒருபகுதியை இந்தக் குழுவின் தலைவன் நாட்டை விட்டுச் செல்லும்போது தன்னுடன் கொண்டு சென்றுள்ளதாக அறிய முடிகின்றது.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 5 மில்லியன் ரூபா பணம், ஒரு பிஸ்டல், ஒரு றிவோல்வர், 4 வாட்கள், 2 மோட்டார் சைக்கிள்கள், ஒரு முச்சக்கரவண்டி மற்றும் 2 வான்கள் ஆகியவற்றைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர். (ச-5)

# டைனோசர் எலும்பில் நோய் தீர்க்கும் மருந்து

## எலும்பு முறிவும் குணமாகிறதாம்

(பீஜிங்)

சீனாவின் ஹெனான் மாகாணத்தில் சில பகுதிகளில் இராட்சத டைனோசர் எலும்புக் கூடுகள் மண்ணில் புதைந்து கிடப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

தோண்டி எடுக்கப்படும் இந்த டைனோசர் எலும்புகளை அங்குள்ள கிராம மக்கள் விரும்பி வாங்குகின்றார்கள். இந்த எலும்புத் துண்டுகள் ஒரு கிலோவுக்கு 50 சென்ட் வரை விலை போகின்றது.

இந்த எலும்புகளைப் பொடி செய்து அதிலிருந்து நோய் தீர்க்கும் அபூர்வ மருந்துகளைத் தயாரிக்கின்றார்கள். எலும்பு முறிவுக்கு இந்த எலும்புத் தூளை பூசி விட்டால் குணமடைகின்றதாம்.

கடுமையான காய்ச்சலுக்கு இந்த டைனோசர் எலும்பு சூப் நல்ல மருந்து என்கின்றார்கள். பக்கவாதம், பாதங்களில் வெடிப்பு ஆகியவற்றிற்கும் இதைப் பயன்படுத்துகின்றார்கள். இந்த டைனோசர்கள் 10 கோடி ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கது. (எ-5)

# பருத்தித்துறை நகரசபைக்கு ஆலோசனைக் குழு நியமனம்

வடக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் பணிப்பிற்கிணங்க பருத்தித்துறை நகரசபைக்கு அபிவிருத்தி ஆலோசனைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இவ்வாலோசனைக் குழுவில் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். எஸ். வின்சன் டீ போல் (முன்னாள் பருத்தித்துறை நகரசபை உபதலைவர்), பி.இராசதுரை(வர்த்தகர்), எஸ்.வல்லிபுரம் (இலங்கை மின்சார சபை இளைப்பாறிய மின் பொறியியலாளர்), என்.குணசீலன் (இளைப்பாறிய அதிபர்), ஆர்.சிவபுண்ணியம் (இளைப்பாறிய உதவி பிரதேச செயலர்), எம்.இராசரத்தினம்(இளைப்பாறிய உள்ளூராட்சி உத்தியோகஸ்தர்), ஏ. வேல்முருகு (நில அளவையாளர்), என்.நமசிவாயம் (சமூக சேவையாளர்), எஸ்.தங்கவேலாயுதசாமி(கடற்றொழிலாளர் சங்கம் சார்பில்). (ச-52)

# வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா நிறுவன இளைஞர் சபையினரால் நடாத்தப்படும் இலவச வழிகாட்டல் கருத்தரங்கில் இன்று கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியை செல்வி என்.கலாவினால் இரசாயனவியல் பாடவழிகாட்டல் நடாத்தப்படவுள்ளது. (ச)

# முன்பள்ளி விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலி. கிழக்குப் பிரதேச சபையின் அனுசரணையுடன் கலைமதி முன்பள்ளி நடாத்தும் விளையாட்டுப் போட்டி பத்தாம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் கலைமதி கரபந்தாட்ட மைதானத்தில் கலைமதி ச.ச.நிலையத் தலைவர் செ.ரஞ்சித்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி. கிழக்குப் பிரதேச சபைச் செயலாளர் நடராஜாவும் கௌரவ விருந்தினர்களாக வலி.கிழக்குப் பிரதேச சபை, புத்தூர் உப அலுவலகப் பொறுப்பதிகாரி கோமளவல்லி தமிழ்ச்செல்வன், சமூக அபிவிருத்தி மன்றம் நவநீதம் ஜெகதீசன், அச்சுவேலி ப.தெ.வ.அ.கூ.சங்க பொது முகாமையாளர் செல்வராஜா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-6)

# சாட்டியில் நடைபெற்ற மடு அன்னைத் திருவிழா

(ஊர்காவற்றுறை)

பிரபல யாத்திரைத் தலமாக விளங்கும் சாட்டி புனித சிந்தாத்திரை அன்னை வளாகத்தில் கடந்த 2 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு மடு அன்னையின் திருவிழா பங்குத்தந்தை அருட்பணியாளர் எஸ். அற்புதராஜா தலைமையில் மிகச் சிறப்பாகவும் பக்திபூர்வமாகவும் நடைபெற்றது.


ஆரம்ப நவநாள்கள் கடந்த 29 ஆம், 30 ஆம், முதலாம் திகதிகளில் ஆரம்பமாகி நடைபெற்றது. கடந்த 2 ஆம் திகதி யாழ்ப்பாணம் இருந்து வந்த மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணியாளர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம், அருட்பணியாளர் மைக்கல் சவுந்தரநாயகம் மற்றும் தீவக அருட்பணியாளர்கள் எக்ஸ்.டபிள்யூ.ஜேமிஸ், அருட்பணியாளர் சோபன் அடிகள் ஆகியோருடன் திருநாள் கூட்டுத் திருப்பலி நடைபெற்றது.

இறுதியில் மடுமாதா ஆசிருடன் திருவிழா நிறைவு பெற்றது. தீவகம், புங்குடுதீவு, வேலணை, ஊர்காவற்றுறை ஆகிய இடங்களிலிருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்கேற்றனர். (ச-72)

**மணமகன் தேவை**

யாழ்.இந்து வேளாளர், அழகிய இளம் பெண், வயது 30, செவிப்புலன் [illegible] [illegible] பேச்சுத் தடைப்பட்ட [illegible] வரன் தேவை. விபரங்களுடன் தொடர்பு கொள்க.

விலாசம்: [illegible] யாழ்ப்பாணம். (ச-172)




யாழ்.சைவ பரிபாலனசபையினரால் நடாத்தப்பட்ட பண்ணிசைப் போட்டியில் மத்திய பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்ற யாழ்.இந்து மகளிர் கல்லூரி மாணவி செல்வி குகனேஸ்வரன் மயூரதிக்கு சைவபரிபாலன சபை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற புண்ணிய நாச்சியம்மையார் தினத்தில் இடம்பெற்ற பரிசளிப்பு வைபவத்தின்போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் ஆறுமுகம் ஸ்ரீஸ்கந்தமூர்த்தி தங்கப் பதக்கம் அணிவிப்பதைப் படத்தில் காணலாம். நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும் படத்தில் காணப்படுகின்றார்.

# யாழ். மாவட்டத்தில் கவனிப்பாரற்ற முன்பள்ளிகளும் ஆசிரியர்களும்

குழந்தை விருத்தியில் முறை சார்ந்த முன்பள்ளி செயற்பாடுகள் மிக முக்கிய மானவை. ஆரம்பக்கல்வி, சிறப்பாகவும் ஒழுங்காகவும் நடைபெறுவதற்கு சிறுவர்களைப் பொறுத்தமட்டில் முன்பள்ளிக் கல்வி ஒரு தேவையாகின்றது. பாலர் கல்வி பற்றிய கல்வியாளர்களின் ஆய்வுகள் முன் பள்ளிகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவனவாக உள்ளன. கருவிலேயே கற்றல் ஆரம்பமாகின்றது என்ற கருத்தும் வலுப் பெற்று வருகின்றது.

முன்பள்ளி கல்வி மொன்ரிசூரி (Montessori System) கல்வி என அதனை ஆரம்பித்த மொன்ரிசூரி அம்மையாரின் பெயரால் வழங்கப்படுகின்றது. இதன் பொருள் பாலர் இயற்பாங்குக் கல்வி என்பதாகும். பல நாடுகளில் 5 வயது பூர்த்தி செய்த பிள்ளைகள் தான் முறைசார் ஆரம்பக் கல்வியைத் தொடங்குகின்றனர்.



5 வயதுக்குக் குறைந்த பிள்ளைகள் வெவ்வேறு வயதிற்கு ஏற்ப கவனிக்கப்படுவர்.

### குழந்தைகள் பேணும் நிலையம் (Creche)

இரண்டு வயது வரையுள்ள குழந்தைகள் இங்கு அனுமதி பெறுவர். குழந்தைகளின் வளர்ப்பும் பாதுகாப்பும் இங்கு முக்கிய கவனத்திற்குட்படுகின்றது. வேலைக்குச் செல்லும் தாய்மார் தங்க்ள் குழந்தைகளை இங்கு விட்டுச்செல்வர்.

### விளையாட்டுப் பள்ளி (Play School)

இரண்டு –மூன்று வயதுக் குழந்தைகள் இங்கு அனுமதிபெறுவர். பிள்ளைகளின் விளையாட்டும் பிற பிள்ளைகளுடன் இணைந்து செயற்படுவதும் சமூக மயமாக்கலும் இங்கு முக்கியத்துவம் பெறுகின்றன. சில சமயங்களில் தாய்மாரும் அங்கு சென்று பிள்ளைகளுக்கும் ஆசிரியர்களுக்கும் உதவியாக இருப்பதுண்டு. தாய்மார்கள் தமக்கிடையே கலந்துரையாடி பிள்ளை வளர்ப்புப் பற்றிய தகவல்களைப் பகிர்ந்து கொள்வர்.

### முன்பள்ளி (Pre - School)

இங்கு 3+,4+ வயதுப் பிரிவினர் கற்பர். மூன்று வயதுப் பிரிவினரும் , 4 வயதுப் பிரிவினரும் தனித்தனியாகக் கற்பர். பல நாடுகளில் 4+ வயதுப் பிரிவினர் முறைசார் ஆரம்பக் கல்விப் பிரிவிற்குள் உள்வாங்கப்பட்டு வரவேற்பு வகுப்பில் (Reception Class) அனுமதி பெறுவர்.

இலங்கையில் முன்பள்ளிக் கல்வி முறையும் கட்டமைப்பும் ஆரம்ப நிலையிலேயே உள்ளன. இவை சிறிதளவே வளர்ச்சி பெற்றுள்ளன. சில ஆண்டுகளுக்கு முன்னர் கிடைத்த தரவுகளின் படி 3%பிள்ளைகளே முன்பள்ளிகளுக்குச் சென்றனர் என அறியப்படுகிறது.

ஆனால் இன்று இவ் வீதம் அதிகரித்துச் செல்லும் போக்குக் காணப்படுகின்றது. சமூக – பொருளாதார மாற்றங்கள், மத்திய தர வகுப்பினரின் விரிவாக்கம், வேலைக்குச் செல்லும் தாய்மாரின் எண்ணிக்கை அதிகரிப்பு, பாலர் கல்வியில் பெற்றோர் கொண்டுள்ள ஆர்வம், முக்கியத்துவம் போன்றன இவ் அதிகரிப்புக்குக் காரணங்களாகின்றன.

இலங்கையில் இக் கல்வி நிலையங்கள் கூடுதலாக தனியாராலேயே நடத்தப்படுகின்றன. மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள், உள்ளூராட்சி சபைகள், தொழில் நிறுவனங்களாலும் நடத்தப்படுகின்றன. எனினும் தனியார் முன்பள்ளிகளே அதிகம் .ஏனையவற்றின் எண்ணிக்கையும் பங்களிப்பும் குறைவு. அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்பள்ளி செயற்பாட்டிற்குக் காலத்துக்குக் காலம் சிறு உத விகள் செய்த போதும், நிலைத்த நீண்ட கால செயற்பாடுகளுக்கு அவற்றின் உதவி போதாதுள்ளது.

அரசாங்கம் முன்பள்ளிச் செயற்பாட்டில் நேரடியாகப் பங்கு கொள்ளவில்லை. கொள்கை வகுத்தல் , மேற்பார்வை செய்தல் போன்றனவற்றில் அரசு அக்கறை கொண்டிருந்தாலும், செயலாக்கத்தில் அதன் பங்களிப்பு இல்லை எனலாம்.

முன்பள்ளி ஆசிரியர்களைப் பயிற்றுவிக்க அரச பயிற்சி நிறுவனங்கள் இல்லை. அண்மைக் காலங்களில் தான் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, கல்விக்கல்லூரி, பல்கலைக்கழகத்தில் முன்பள்ளி கல்வி பற்றிய எண்ணக்கருக்கள் எழுந்தாலும் , அவை செயலுருப் பெறவில்லை. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் மாத்திரம் முன்பள்ளி கல்வி பயிற்சி நெறி உண்டு. இதன் வழியாக வரும் ஆசிரியர்களின் எண்ணிக்கை மிகச் சிறியது. தனியார் நிறுவனங்கள் தான் இப் பயிற்சி நெறியில் ஈடுபட்டுவருகின்றன.

மேலும் , முன்பள்ளிகளில் பணிபுரியும் அனுபவமுள்ள மூத்த ஆசிரியர்கள் இளைய ஆசிரியர்களுக்கு பயிற்சி கொடுக்கிறார்கள்.



ஆகவே முறையான பயிற்சி பெற்ற முன்பள்ளி ஆசிரியர்கள் இங்கு இல்லை என்றே சொல்லலாம்.மேலும் , ஒரு சிலரே இவ் ஆசிரியப் பணியில் தொடர்ந்து நிலைத்து நிற்கின்றனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 708 முன்பள்ளிகளும் அவற்றிற்குரிய 1166 ஆசிரியர்களும், 15,934 மாணவர்களும் இருப்பதாக உள்ளூராட்சி திணைக்கள அறிக்கை –2005 தெரிவிக்கின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட முன்பள்ளிகள் பற்றிய விபரங்கள் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

தகவல் உள்ளூராட்சித் திணைக்கள அறிக்கை – 2005. முன்பள்ளி கற்கை நெறி மக்களிடையே வரவேற்பைப் பெற்று வருகின்றது என்பதனை அட்டவணையில் காணப்படும் விபரங்கள் காட்டி நிற்கின்றன.

இதனால் முன்பள்ளிகளினதும் ஆசிரியர்களினதும் நலன்கள் நன்கு கவனிக்கப்பட வேண்டும்.

முன்பள்ளிகளின் இட அமைவு, இடப் பரப்பு, வகுப்பறைகள் , விளையாட்டு உபகரணங்கள் போன்றன பெருமளவிற்குத் திருப்தியான நிலையில் இல்லை. பல வீட்டு விறாந்தைகள், அறைகளில் நடத்தப்படுகின்றன. இதனால் பிள்ளைகள் ஆடல், பாடல், விளையாட்டுடன் சேர்ந்த ஒரு கல்வியைப் பெறமுடியாதுள்ளனர்.

முன்பள்ளி ஆசி ரியர்கள் சிறுபிள்ளைகளை கவ னிக்க வேண்டி யிருப்பதால் பெரும் பொறுப்பை சுமக் கின்றனர். பிள்ளைகளை ஆடல், பாடல்,விளையாட்டு மூலம் கற்பித்தல், அவர்களை ஒற்றுமையாக இணைந்து செயற்படவைத்தல், உணவு உண்ண வைத்தல் , 'ரொயிலட்' பயிற்சி கொடுத்தல்போன்ற செயற்பாடுகளைச் செய்கின்றனர். மேலும் கற்பித்தல் நேரம் முடிந்தாலும் பிள்ளைகளின் பெற்றோரோ வேறு கூட்டிச் செல்வோரோ வரும் வரை பிள்ளைகளுக்குப் பாது காப்பாக இருப்பர்.

இத்தகைய பெரும் பொறுப்பும் பொறுமையும் நிறைந்த பணியைப் புரியும் முன்பள்ளி ஆசிரியர்கள் முறையான ஊதியத்தையோ தொழில் வாண்மையையோ, தொழிலைச் சிறப்பாகச் செய்வதற்கான நல்ல பௌதீக வளங்களையோ முறைசார் பாடசாலை ஆசிரியர்கள் அனுபவிக்கும் சலுகைகளையோ பெறுவதில்லை என்பது கவலைக்குரிய விடயம். இவ்ஆசிரியர்கள் மன அழுத்தங்கள், துன்பங்களுடனேயே பணிபுரிகின்றனர். யாழ்ப்பாண சமூகம், சிவில் சமூகம், தொண்டார்வ நிறுவனங்கள், அரசாங்கம் இவ் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் தொழில் பிரச்சினைகளை கருத்தில் எடுப்பதாகவோ , அவற்றை நீக்க முயற்சிகள்எடுப்பதாகவோதெரியவில்லை. முன்பள்ளி ஆசிரியர்கள் தொழில் ரீதி யாக நிரந்தரமான நிலையில் இல்லை.1166 ஆசிரியர்களுள் 11பேரே நிரந்தரம் எனக் கருதப்படுகின்றனர். எனவே நாம் நிரந்தரமான தொழிலைக் கொண்டிருக்கின்றோம் என்ற மன நிறைவு இவர்களிடம் இல்லை.

இவர்களில் நிரந்தரமான 11பேர் மட்டும் மாதம் 12,000/- சம்பளத்தைப் பெறுகின்றனர். ஏனையோரில் மிகப் பெரும்பான்மையானவர்கள் ரூபா 1500க்கு குறைவாகப் பெறுகின்றார்கள். ரூபா 1000க்கு குறைவாக பெறுபவர்களும் உள். மாதா மாதம் ஊதியத்தை குறித்த காலத்தில் பெற முடியாத நிலையும் உள்ளது. ஆசிரியர்கள் பெண்களாக இருப்பதுடன் பெரும்பாலோர் குடும்பச் சுமையைச் சுமப்பவர்களாக இருப்பதும் கவனிக்கத்தக்கவை. சிறுபிள்ளைகளுக்கு கற்பிக்கும் ஆசிரியைகள் தாம்பெறும்ஊதியத்துக்குள் நேர்த்தியான உடைகளை வாங்குவதே கடினம்.

இதன்னால் தமது சொந்தப் பணத்தை செலவு செய்து வீட்டில் இருக்காது ஏதோ வேலைக்குச் செல்கின்றோம் என்ற சிறு திருப்தியுடன் பணிபுரிகின்றனர்.

முன்பள்ளி ஆசிரியர்கள் தொழில் வாண்மை பெறும் வாய்ப்பு மிகக்குறைவு. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புறநிலைப் படிப்பு அலகில் முன்பள்ளி கற்கை நெறி சிறியளவில் கற்பிக்கப்பட்டது. ஆனால் இது முழுமையான தொழில் சார் கற்கை நெறியன்று. காலத்திற்குக் காலம் முன்பள்ளி பயிற்சி பட்டறைகள் , தன்னார்த் தொண்டு நிறுவனங்கள் , உள்ளூராட்சித் திணைக்களம் போன்றவற்றால் நடாத்தப்பட்ட கருத்தரங்குகள் தான் இவர்களுக்கு சிறியளவில் பயிற்சி வழங்கின. முறையான தொழில் சார் கற்கைநெறி கிடைக்காததையிட்டு இவ் ஆசிரியர்கள் மனக் குறையுடன் உள்ளனர்.

அட்டவணை

யாழ்ப்பாண மாவட்டத்தில் பதிவுசெய்யப்பட்ட முன்பள்ளிகள் பற்றிய விபரங்கள் -2005

| பிரதேசசெயலகம்/உதவி அரசாங்க அதிபர் பிரிவு | முன்பள்ளிகளின் எண்ணிக்கை | மாணவர்கள் எண்ணிக்கை | ஆசிரியர்கள் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|
| | | | நிரந்தரம் | மற்றவைகள் |
| 01.நெடுந்தீவு | 7 | 200 | - | 12 |
| 02.தீவுகள் தெற்கு | 29 | 580 | 02 | 45 |
| 03.தீவுகள் வடக்கு | 20 | 500 | - | 30 |
| 04.காரைநகர் | 17 | 400 | - | 29 |
| 05.யாழ்ப்பாணம் | 38 | 1100 | - | 80 |
| 06.நல்லூர் | 63 | 1600 | - | 94 |
| 07.வலிகாமம் தென்மேற்கு | 58 | 1415 | 03 | 102 |
| 08.வலிகாமம் மேற்கு | 63 | 971 | - | 82 |
| 09.வலிகாமம் தெற்கு | 48 | 1003 | - | 90 |
| 10.வலிகாமம் வடக்கு | 40 | 780 | 02 | 80 |
| 11.வலிகாமம் கிழக்கு | 82 | 1650 | 01 | 140 |
| 12.தென்மராட்சி | 92 | 1915 | 01 | 127 |
| 13.வடமராட்சி தென்மேற்கு | 62 | 1525 | 01 | 97 |
| 14.வடமராட்சி வடக்கு | 67 | 1865 | 01 | 117 |
| 15.வடமராட்சி கிழக்கு | 22 | 430 | - | 30 |
| | 708 | 15934 | 11 | 1155 |

கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கும் யாழ்ப்பாணம் ஏன் முன்பள்ளி ஆசிரியர்கள் நிலையை கவனத்தில் எடுக்கவில்லை. இவர்களின் கல்வித் தகமையை ஒத்தவர்கள் அரச சேவையில் ரூபா 7,500முதல் 10,000 வரை ஊதியம் பெறுகின்றார்கள். இன்று நாட்கூலி சராசரி ரூபா 500க்கு மேல் இருக்க, சிறு பாலகர்களின் பல்வேறு சுமைகளைச் சுமந்து கல்விக்கு அத்திவாரம் இடும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு இச் சிறு வேதனமா? இதைப் பெறுவதற்கு அவர்கள் படும் பாடு கொஞ்சமா? அதுவும் கையில் கிடைத்த அன்றைக்கு சந்தோஷம். இன்றைய வாழ்க்கைச் செலவு வானத்தை எட்டுகின்றது. இந்நிலையில் இவர்களிடம் இருந்து திருப்தியான சேவையை எதிர் பார்க்க முடியுமா ? இவ் ஆசிரியர்களின் தொழில் ரீதியான துன்பங்களை நீக்க பெற்றோர், சிவில் சமூகத்தவர், தன்னார்வத் தொண்டுநிறுவனங்கள் முன்வர வேண்டும்.

வாழ்நாள் பேராசிரியர்
பொன். பாலசுந்தரம்பிள்ளை
(Ph.D.,Durham)

முன்பள்ளிகளின் சிறந்த செயற்பாட்டிற்கு பெற்றோர்களின் பங்களிப்பு மிக முக்கியம். பிள்ளைகள் நல்ல கல்வியைப் பெற வேண்டுமென்றால் சிறந்த முன்பள்ளிகளும், உரிய ஊதியமும் அந்தஸ்தும் பெறும் ஆசிரியர்களும் தேவை.பெற்றோர் உரிய கட்டணங்களை வழங்கி கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்கலாம்.

கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் பெற்றோர் அதற்கு முதலிடத் தயங்குவது ஏன்? வளர்ச்சியடைந்த நாடுகளில் குறிப்பாக இங்கிலாந்தில் ஒருவர் முன் பள்ளி கல்விக்கு செலவு செய்யும் தொகை ஒரு பல்கலைக்கழக மாணவனுக்கு செலவு செய்த தொகைக்கு அண்மித்ததாகவுள்ளது.

முன்பள்ளி ஆசிரியர்களின் நலன்கள் பேணப்படும் பொழுதே அவர்களிடமிருந்து சிறந்த கல்விச் சேவையைப் பெறமுடியும். முன்னைய காலங்களில் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களே கல்விக்கு அத்திவாரம் இட்டனர்.

ஆனால் இன்று முன்பள்ளி ஆசிரியர்களே அப் பணியைச் செய்கின்றனர். அத்திவாரம் பலமாக இருந்தால் தான் மேல் எழும்பும் கட்டடம் உறுதியாக நிலைத்து நிற்கும்.

# எண்சோதிடம்

எண் - எழுத்து

***எண்:***

உங்களைப் பற்றி இந்நூல் விஷயங்களை அறிந்து கொள்ள, உங்களுடைய எண்களை முதலில் அறிந்து கொள்ள வேண்டும். இது ரொம்பவும் சுலபமான விஷயம். நீங்கள் எப்பொழுது பிறந்தீர்கள்? பிறந்த திகதியால் குறிக்கப்படும் எண்ணும், திகதி, மாதம் வருடம் மூன்றையும் கூட்டினால் வரும் எண்ணுமே உங்களுடைய எண்கள். உதாரணமாக 17.10.1931 என வைத்துக் கொள்ளுவோம். 17 எண் 1+7=8 ஆகிறது. முழுதும் கூட்டினால் 1+7+1+0+1+9+3+1= 23. 2+3=5 வருகிறது. 8&5 உங்களது எண்கள். இரவு 12மணிக்குப் பிறகு பிறந்தால் அடுத்த திகதியாகும்.

பிறந்த திகதி எண் நீங்கள் எந்த ஆதிக்கத்தின் கீழ் பிறந்தவர்கள் என்பதைக் குறிக்கிறது. அந்த எண்ணை அனுசரித்தே சரீர அமைப்பு, குணங்கள் முதலியவைகள் அமைகின்றன. வாழ்க்கையில் சம்பவங்கள் நிகழ்வதையும் மற்ற ஜனங்களுடன் உங்களுக்கு ஏற்படும் தொடர்பையும், எதிர்காலத்தையும், வாழ்க்கை முடிவையும், திகதி, மாதம், வருஷம் மூன்றையும் கூட்டிவருகிற எண் குறிக்கிறது. கூட்டிவரும் எண் பிறந்த திகதி எண்ணை விட வலிமையுடன் இருந்தால் குணங்களும் உருவமும் கூட கூட்டிவரும் எண்ணிற்கு ஏற்ப அமையும். பிறந்த திகதி எண் ஒருவருடைய தகுதியையும், ஆசைகளையும் குறிக்கிறது. கூட்டிவரும் எண்ணிக்கை அவரால் எவ்வளவு தூரம் வாழ்க்கையில் முன்னேற முடியும் என்பதைத் தெளிவாக்குகிறது. விதியைக் கூட்டிவரும் எண்ணே குறிக்கிறது. விதியென்றவுடன் ஏதோ கெடுதலான விஷயமென நினைக்க வேண்டாம். இவ்விடத்தில் விதியென்பதை முடிவு, எல்லை என்றே கொள்ளவேண்டும். ஒரு சிறு உதாரணம் இதை விளக்கிவிடும். ஒரு மாட்டைப் புல்தரையில் மேய்வதற்காக ஒரு மூலையில் கட்டுகிறோம். அதன் மேய்ச்சலுக்குப் போதுமான சுற்றளவு கொடுக்கும் நீண்ட கயிற்றைத் தான் உபயோகிக்கிறோம்.

அந்த எல்லைக்குள் அது எவ்வளவுவேண்டுமானாலும் தன்னிச்சைப் படிக்கு மேயலாம். அதற்குமேல் தேவையுமில்லை. தான் அந்த அளவுக்குள் கட்டப்பட்டிருக்கிறோம் என்பதை அந்த எல்லையை மீற முயற்சிக்கும் வரை மாடு உணராது; மீறவும் முடியாது.

ஆனால் அந்த எல்லைக்குள்ளேயே ஏதாவது குறுக்கிட்டுத் தடுத்தால் அதை நீக்கிக் கொள்ளலாம். அதே மாதிரித்தான் நம் வாழ்க்கையிலும் - நாம் எந்தெந்த துறையிலும் முயற்சி செய்ய வேண்டியவர்களோ அதிலெல்லாம் நாம் வெற்றியைக் காண்போம். தவறான முயற்சிகளில் ஈடுபடும்போது வெற்றி சக்திதடைப்பட்டுப் போகிறது. எவ்வளவோ பேர்கள் அதிர்ஷ்ட வசமாகத் தனக்கேற்ற தொழிலில் ஈடுபட்டு சம்பாதித்த பெரும் பொருளை, சம்பந்தமில்லாத வேறு தொழிலில் ஈடுபட்டு இழக்கின்றனர். இதற்கு அதிர்ஷ்டம் மாறிவிட்டதாகக் காரணம் சொல்வது சற்றும் பொருந்தாது. ஆகவே ஒவ்வொருவரும் தனக்கேற்ற காரியங்களிலேயே ஈடுபடுவது வெற்றி காண்பதற்குத் தேவையான அடிப்படையாகும்.

விதி எப்படி எவ்வளவு தூரம் பாதிக்கிறது? ஒரு சாதாரண உதாரணத்தின் மூலம் இதை நன்கு அறியலாம். புளிப்பான ஒரு மாம்பழத்தின் கொட்டையை நடுகிறோம். செடி முளைக்கிறது. அது மரமானால் புளிப்பான மாம்பழத்தையே தரும். நமக்குப் புளிப்பான பழம் வேண்டாம், இனிப்பான பழம் வேண்டும் என்றால் என்ன செய்கிறோம்? ஒரு இனிப்பான பழம் தரும் செடியில் இச்செடியை ஒட்டுகிறோம். இச் செடியில் தனியே வளரும் கிளைகளை வெட்டிவிட்டு சேர்த்த பின்னர் வளரும் கிளைகளையே கவனிக்கிறோம். இனிப்பான ஒட்டுப் பழம் கிடைக்கிறது. (தாவரங்களில் செய்யும் இவ்வித்தையை நம் வாழ்க்கையில் நிகழ்த்துவதா ஒரு பிரமாதம்!) இம் மாஞ் செடியை இம் முயற்சிகள் மூலம் எவ்வளவு உயர்ந்த மாங்கனி உண்டாக்கும்படி வேண்டுமானாலும் செய்யலாம்.

ஆனால் இச்செடியை எந்த முயற்சியாலும் பலாப்பழத்தையோ, வாழைப்பழத்தையோ தரும்படி செய்யமுடியாது. விதி மாற்ற முடியாதது என்பதன் பொருள் இதுவேதான். எப்பொழுது இச் செடி மாங்கொட்டையிலிருந்து உண்டானதோ அப்பொழுதே இது மா எனும் வகைகள் கட்டுப்பட்டு விட்டது. அந்த வகைகள் எவ்விதமாறுதலையும் அது அடையலாம்.

ஆனால் வேறு ஒரு இனமாக மாற முடியாது. இந்தச் சட்டம்தான் மனிதர் வாழ்க்கையையும் பாதிக்கிறது.

'ஹிந்துதேச சாஸ்திரங்களின் படி ஒவ்வொரு வரும் முன்பிறவியின் அபிலாஷைகளுக்கு ஒப்ப அவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவே மறுமுறை ஜனிக்கின்றனர். அனுபவிக்க வேண்டியதற்கு ஒத்த விதியுடனும், அதற்குத் துணை புரியக் கூடிய சரீர, மன அமைப்புக்களுடன் பிறக்கின்றனர்.

பிறந்த திகதி எண் குறிக்கிற எத் தொழிலையும் வெற்றியுடன் செய்யலாம். பலன்கள் கூட்டு எண் குறிக்கிற அளவுக்கு உட்பட்டுக் கிடைக்கும். கூட்டு எண் அதிர்ஷ்டகரமானதாக இருந்தால் பெரிய வெற்றிகள் கிட்டும்.

எண், எழுத்து ஆகிய இரு பிரிவுகளில் இப்பொழுது நீங்கள் எந்த எண்கள் உடையவர் என்பதை அறிந்து கொண்டிருப்பீர்கள். இதுவே முக்கியமான விஷயம். ஏனெனில் இதை அனுசரித்துத்தான் எழுத்துப் பகுதியை அமைத்துக் கொள்ள வேண்டும்.

***எழுத்து:***

இந்த சாஸ்திரத்தை ஆராய ஆரம்பித்த புதில் ஆங்கில எழுத்துக்களை வைத்துக் கொண்டு ஆராய்கிறோமே என்று சிறிது வருத்தமடைந்தேன். ஆங்கில எழுத்துக்கள் குறித்த பலன்கள் விசித்திரமான பெயர்கள் கொண்ட பல தேசத்தினருக்கும் பொருத்தமாக இருப்பதைக் கண்டேன். ஆங்கில எழுத்தில் வலிமையிருப்பதை அனுபவம் உணர்த்திற்று. பின்னரே மந்திர நூல்களை ஆராய்ந்து வந்த போது பவிஷ்யத் வர்த்தமாணங்களைக் கூறும் புராணத்திலும் அதைச் சேர்ந்த நூல்களிலும் கீழ்க்கண்ட பொருள் கொண்ட குறிப்புகளைக் கண்டேன்.

" கலியுகம் சரியாக நடக்கும்போதுவர்ணாஸ்ரம தர்மங்கள் மாறிப்போகும். ஒவ்வொருவரும் மனம்போன போக்கில் தொழில்களைச் செய்வார்கள். மனிதர்களென்ன, பஞ்சபூதங்களே தம் தொழில்களில் மாறுபாடடையும்; பழமை பொருந்தின மொழிகள் பேசப்படாமல் போகும்போது தேவியின் மாத்ருகா மந்திரத்தின் இரண்டாவது பாகத்தின் (ஐம், க்லீம், சௌகு) பெயரையுடைய பாஷையே மேன்மை பொருந்தி எல்லோராலும் விரும்பப்பட்டு கலைஞானங்கள் அதிலேயே வளர்க்கப்படும். அந்தக் காலத்திலே தீபங்களும் கீழ் நோக்கி எரியும் 'எவ்வளவு தூரம் இது உண்மையாகி விட்டதென்பதை நீர் வீழ்ச்சி களிலிருந்து மின்சாரமும், அதிலிருந்து பங்காவாகக் காற்று வீசுவதும், அடுப்பாக அக்னியும் மற்றவைகளும் தோன்றுவதைக் காண்கிறோம்.

மேலே குறிக்கப்பட்ட பாஷையே இங்கிலீஷ்; கீழ் நோக்கி எரியும் மின்சார தீபம் விளக்கின் சரிதையில் ஏற்பட்ட புரட்சியல்லவா!

இவைகளை கண்ட பின்னர் தான் ஆங்கில எழுத்துக்களின் ஒலி அலைகளையும் வர்ணாங்களையும், அவைகளின் சக்தி களையும் ஆராய் வதில் ஊக்கம் உண்டாயிற்று. (இந்நூலை முதலில் ஆங்கிலத்தில் இருப்பதால் ஏற்க மறுத்த காசியைச் சேர்ந்த பண்டிதர்கள் இவ்விஷயத்தை சொன்ன பின்னரே அங்கீகரித்தனர்)

ஒவ்வொரு எண்ணைப்பற்றியன அத்தியா யத்திலும் அவ் எண் குறிக்கும் எழுத்துக்களைப் பற்றியும் குறிக்கப்பட்டிருக்கிறது.



அதையும் வாசகர்கள் பயன்படுத்திக் கொள்ளவும் 12 ராசிகளிலும் 9 கிரகங்களும் ஒவ் வொரு சமயம் வலிஷ்ம் பெற்றிருக்கும் போது ஏற்படும் பலன்களே 108 எண்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

உங்கள் பெயர் என்ன எண் உடைய தென்பதை அதன் எழுத்துக்களின் எண்களை கூட்டியறியவும். இதோ எழுத்துக்களுக்கான சரியான எண்கள்.

| A | B | C | D | E | F | G | H | I | J | K | L | M | N |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 8 | 3 | 5 | 1 | 1 | 2 | 3 | 4 | 5 |

| O | P | Q | R | S | T | U | V | W | X | Y | Z |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 8 | 1 | 2 | 3 | 4 | 6 | 6 | 6 | 5 | 1 | 7 |

பெயரில் வரும் போது இந்த எண்கள் தான் உண்டு. தனியே சத்தமாகவுள்ள போது தான் I, J, Y, 10 ஆகவும், K 20 ஆகவும், L, S 30 ஆகவும், M 40 ஆகவும் N 50, O 70, P 80, Q 100, R 200 ஆகவும் T 400 ஆகவும் தோன்றும்.

**பண்டிட் ஸேதுராமன்**

எண்கள் எழுத்துக்கள் உண்டாகும் ஒலியின் வேகத்தை அல்லது தாக்கும் சக்தியை குறிக்கின்றன.

சில உதாரணங்களும் கூறுகிறேன் (பெயர் எப்படி எழுதப்படுகிறதோ அப்படியே கணக்கிடவேண்டும் பதவியைக்குறிக்கும் சொற்களையும், மரியாதைக்காகசேர்க்கப்படும் Mr. முதலிய எழுத்துக்களையும் சேர்க்க வேண்டாம். பெயருக்குப்பின்னர் வரும் எழுத்துக்களுக்கு மதிப்புக்கிடையாது)

(தொடரும்)

## திருமறைக் கலாமன்றத்தில் பரதநாட்டிய பட்டப்படிப்பு பயிற்சி நெறி ஆரம்பம்

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகமும் கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரியும் இணைந்து பரதநாட்டியத்தில் முதல் தடவையாக ஆரம்பித்துள்ள வளாகம் பட்டப் படிப்பு பயிற்சி நெறியை இலங்கையில் ஆரம்பிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியில் இன்று காலை 10.00 மணிக்கு அதற்கான ஆரம்ப வைபவம் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக நடனத்துறையில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாளராகவும் யாழ். பல்கலைக்கழகத்தில் இடைவரவு விரிவுரையாளராகவும் பணியாற்றும் திருமதி சாந்தினி சிவனேசனும், சிறப்பு விருந்தினர்களாக திருமறைக் கலாமன்ற இயக்குநர் பேராசிரியர் நீ.மரியசேவியர் அடிகள், ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு, யாழ்ப்பாண பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கலைத்தூது அழகியல் கல்லூரி இயங்கும் இல 128 டேவிற் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைக்கோட்டத்தில் இந் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இப்பயிற்சி நெறியை யாழ்ப்பாணத்தில் கலைத்தூது அழகியல் கல்லூரிக்கூடாக பயில்வதற்கு விண்ணப்பித்த அனைத்து மாணவர்கள் மற்றும் ஆர்வலர்களையும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (அ)

## உள்ளூராட்சி வாரம்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு இவ்வருடம் வலி கிழக்கு பிரதேச சபையினால் யூலை 9-15 வரை மேற்கொள்ளப் படவிருக்கும் செயற்றிட்டங்கள்.

உப அலுவலகங்களிற்குட்பட்ட மயானங்களை பொதுமக்களின் ஒத்துழைப்புடன் சிரமதானம் செய்தல், வாதரவத்தை, பொக்கணை, பத்தமேனி, இருபாலை கிழக்கு போன்ற பிரதேசங்களில் நடமாடும் ஆயுள்வேத மருத்துவ சேவையினை நடாத்துதல்.

வலி கிழக்கு பிரதேச சபையின் மகாநாட்டு மண்டபத்தில் நூலக கண்காட்சியினை நடாத்துதல், மயானங்கள், சந்தைகள், சன சமூக நிலையங்கள், பொது இடங்களில் பயன் தரு மரங்களை நாட்டுதலும், சூழல் பாதுகாப்பினை பேணுதலும். வலி கிழக்கு பிரதேசத்திலுள்ள முன்பள்ளி சிறார்களிடையே விளையாட்டுக்கள், கலை நிகழ்ச்சிகளை நடாத்தி பரிசில்களை வழங்கி ஊக்குவித்தல், சூழல் மாசுறுவதை தடுத்தல் தொடர்பாக பாடசாலை மாணவர்களிற்கும் பொது மக்களிற்கும் துறைசார் நிபுணர்களால் கருத்தரங்கு நடாத்துதலும், துண்டுப்பிரசுரம் விநியோகத்தலும் பொதுக்கிணறுகளை குளோறின் இட்டு சுத்தப்படுத்தலும், உணவகங்கள், வெதுப் பகங்கள், தேநீர்சாலைகளிற்கு பொது சுகா தாரப் பரிசோதகர் மூலம் தரங்கணிக்கப்பட்டு பரிசில்கள் வழங்கலும், பாடசாலை மாண வரிடையே கவிதை கட்டுரைப் போட்டிகளை நடாத்தி பரிசில்கள் வழங்குதல்

முன்பள்ளி சிறார்களிற்கு சத்துணவு வழங்குதல், கர்ப்பிணித் தாய்மார்களிற்கும் குழந்தைகளிற்கும் தாய்சேய் பராமரிப்பு நிலையங்களூடாக சத்துணவு வழங்கல் என வலி கிழக்கு பிரதேச சபை, புத்தூர், செயலாளர் அறிவித்துள்ளார். (அ)

## முன்பள்ளி விளையாட்டுவிழா

(கோப்பாய்)

கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் ச.ச. நிலைய முன்பள்ளி விளையாட்டுப்போட்டி நிகழ்வுகள் இன்று பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

நிலையத் தலைவர் மு.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வின் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் ஆ.சிறிஸ்கந்தமூர்த்தியும், கௌரவிருந்தினராக கிராம சேவையாளர் சு. முத்துக் குமாரசாமியும் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-79)

## நற்பண்புச் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்தும் புண்ணிய கிராம வேலைத்திட்டத்தை செயற்படுத்தும் ஒரு நாள் நற்பண்புச் செயலமர்வின் தென்மராட்சி செயலமர்வு இன்று காலை 8.30 மணிக்கு கொடிகாமம் தவசிக்குளம் கண்கையம்மன் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

அபிவிருத்தி உதவியாளர் செல்வி சீ.மகிந்தினி தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் பிரதமவிருந்தினராகவும், கொடிகாமம் பிரதேசசபைச்செயலர் என். பாலச்சந்திரன் சிறப்பு விருந்தினரா கவும் கலந்து கொள்கின்றனர். (ச)

## மென்பந்து கிரிக்கெற் சுற்றுப்போட்டி

புத்தூர் சோமாஸ்கந்தன் சன சமூக நிலையத்தினர் நடாத்தும் மாபெரும் மென்பந்து கிறிக்கெற் சுற்றுப் போட்டியின் இறுதிநாள் நிகழ்வுகள் புத்தூர் சிவன் கோவிலடியில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1.00மணியளவில் செல்வன் சி.கோபிகிருஷ்ணா தலைமையில் இடம்பெறும். (அ)

## இராசிபலன்

08.07.2007

(ஆனி 24, ஞாயிற்றுக்கிழமை)

அட்டமி முற்பகல் 08.36 மணிவரை

ரேவதி பிற்பகல் 01.00மணி வரை

இராகுகாலம் 04.28-05.58 மணிவரை

சுபநேரம் 08.58-10.28 மணிவரை

அமிர்தம்

| | |
|---|---|
| மேடம் | சிந்தனை மிகுதி, வெகுமானம், நல்ல முயற்சி, போசனம் சுகம். |
| இடபம் | சோம்பல் நிலை, பிறர் உதவி, தொழில் சிந்தை, முயற்சி தாமதம். |
| மிதுனம் | நண்பர்கள் சந்திப்பு, போசன சுகம், ஆரோக்கியம், தெய்வசிந்தை. |
| கடகம் | பிரபுத்தனம், நல்ல முயற்சி, இஷ்டசித்தி, உறவினர் சந்திப்பு. |
| சிங்கம் | வயிற்றுவலி நிர்பந்திக்கப்படுதல், பெரியோரால் நன்மை, அதிக செலவு. |
| கன்னி | மரியாதைக்குறைவு, போசன சுகம், உறவினர் சந்திப்பு, முயற்சி தாமதம். |
| துலாம் | தேகநலன், கீர்த்தி, தொழில் சிந்தை, கல்வியில் ஆர்வம். |
| விருச்சிகம் | திடீர்பயணம், போசன நன்மை, உடல் நலம், முயற்சி கைகூடும். |
| தனுசு | அஜீரணக் கோளாறு, முயற்சி தாமதம், சோம்பல் நிலை, பணக்குறைவு. |
| மகரம் | ரோகநிலை, மனச்சஞ்சலம், தனவிரயம், காரிய தாமதம். |
| கும்பம் | மனோ தைரியம், பெருமையடைதல், உறவினர் சந்திப்பு, காரிய அனுகூலம். |
| மீனம் | அதிகசெலவு, வேலைச்சுமை, எடுத்த கருமங்கள் தாமதமாகும், மரியாதைக்குறைவு. |

- வளவன்

பயங்கரவாதத்தைப் பிரயோகிப்பதா? அல்லது தீமைக்கு அடிபணிவதா? என்ற நிலை ஏற்படும்போது பயங்கரவாதத்தைப் பிரயோகிப்பதே சிறந்தது.

–டாக்டர் இராதாகிருஷ்ணன்

வலம்புரி

# எது பயங்கரவாதம் என்பதை உலக நாடுகள் தீர்மானிக்க வேண்டும்

பயங்கரவாதம் என்ற சொற்பதத்திற்கு இன்னமும் சரியான வரைவிலக்கணம் வகுக்கப்படவில்லை. ஐக்கிய நாடுகள் சபையில் கூட பயங்கரவாதம் என்ற சொற்பதத்திற்கான வரைவிலக்கணம் இன்னமும் சரியாக வகைப்படுத்தப்படவில்லை.

ஒரு தரப்புக்குப் பயங்கரவாதமாகத் தெரிகின்ற அமைப்பு இன்னொரு தரப்பில் உரிமைப் போராட்ட - விடுதலைப்போராட்ட இயக்கமாக இருக்கின்றது.

அப்படியானால் அந்த அமைப்பை பயங்கரவாதம் என அடையாளப்படுத்த முடியுமா? என்பது முற்றுப் பெறாத கேள்வியாகவே நீள்கிறது. ஒரு தரப்புக்குப் பயங்கரவாதமாகவும் மறு தரப்புக்கு விடுதலைப் போராட்ட அமைப்பாகவும் இருக்கக் கூடிய ஓர் இயக்கத்தை பயங்கரவாதமென வரையறை செய்யும் அதிகாரம் யாரிடமும் இருக்கிறதா எனில் அதுதான் இல்லை.

எனவே எழுந்தமானமாக எடுக்கப்படும் 'பயங்கரவாதம்' என்ற சொற்பதத்தை உலக நாடுகள் அங்கீகரிக்கக் கூடாது. இது ஒருபுறம் இருக்க, மறுபுறத்தில் பயங்கரவாதம் என்ற பதம் அரசிற்கும் பொருந்துமா? என்ற சிந்தனை விரிவுபட வேண்டிய தேவை, நசுக்கப்படும் மக்களால் முன்வைக்கப்படும் நியாயப்பாடுகளில் இருந்து எழுகின்றது.

அதாவது பெரும்பான்மையினம் சார்ந்த அரசு என்ற ஜனநாயக முரண்பாடான கொள்கையில், சிறுபான்மையின மக்கள் அடிமைப்படுத்தப்படுகின்றார்கள்.

ஆள்வதும் அரசாட்சி செய்வதும் சட்டங்களைப் பெரும்பான்மையினம் சார்பில் உருவாக்குவதுமான நடவடிக்கைகளை பெரும்பான்மைப் பலத்தில் உருவான அரசு செய்கின்றபோது அவை சிறுபான்மையினத்தை - மொழியை - மதத்தை நசுக்குவதாக - திட்டமிட்டு அழிப்பதாக அமைகின்றது.

அப்போது ஜனநாயகம் என்ற பெயரால் உருவான 'அரசு பயங்கரவாதம்' என்ற போர்வையை - பதத்தை தனக்குரித்தாக்குகிறது. இப்போது சிறுபான்ம்மையினம் தனக்கெதிரான அமைப்பாக - தனது இனத்திற்குப் பயங்கரவாதமாக அரசையே சுட்டிக்காட்டுகின்றது.

அதேநேரம் தனது இனத்தின் உரிமைக்காக போராடுகின்ற அமைப்பை அது ஆதரிக்க அல்லது அந்த அமைப்புத் தொடர்பில் எதிர்க்கருத்தை புறந்தள்ளுகின்றது.

அப்படியானால் இப்போது எது பயங்கரவாதம் என ஆராய்வது முக்கியமானதாகும். எது பயங்கரவாதம் என்பதை நிறுத்திட்டமாக வரையறை செய்வதற்கு முன்னதாக பயங்கரவாதப் பட்டியல்களைத் தயார் செய்ய முற்பட்டதனால் ஜனநாயக அரசுகள் என்று தம்மைக் கூறிக் கொண்டு சிறுபான்மையான மக்களுக்கு அநீதி விளைவிக்கும் அரசுகளும் 'பயங்கரவாதம்' என்ற பதத்தை முன்வைத்துத் தப்பி விடுகின்றன.

# எதிர்வரும் தேர்தலில் ஐ.தே.க. சார்பில் மங்கள சமரவீர பிரதமர் நிலைக்குப் போட்டி

## விமல் வீரசன்ச எம்.பி. உரை

(கொழும்பு)

ஜே.வி.பி. உருவாக்க எதிர்பார்த்திருக்கும் புதிய தேசிய முன்னணி அரசியல் கட்சிகளுக்கு மட்டும் சந்தர்ப்பம் அளிக்காது சமூகத்திலுள்ள அனைத்து சக்திகளையும் உள்ளடக்கியதாக இதுவரை உருவாக்கப்படாத ஒரு புதிய முறையிலான கூட்டணியாக மலரும் என அக் கட்சியின் பிரசார செயலாளரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

நாடு செல்லும் பாதையும் எங்கள் பொறுப்பும் என்ற தொனிப் பொருளில் ஜே.வி.பி. ஏற்பாடு செய்த கருத்தரங்கு கடந்த திங்கட்கிழமை இரவு குருநாகல் பிறைட் பிராவோ உல்லாச விருந்தகத்தில் நடைபெற்றது. புத்திஜீவிகள் பலர்கலந்து கொண்ட அக் கருத்தரங்கில் அவர் மேலும் கூறியதாவது,

எமது நாட்டில் இன்று புத்திஜீவிகளுக்கு இடமில்லை. கொலையும் கொள்ளையும் மலிந்து காணப்படுகின்றது. எமது தேசிய வருமானத்தில் பெருமளவு பணம் பெற்ற கடன்களுக்காக வட்டிகளைச் செலுத்தவே செலவுசெய்யப்படுகின்றது. எடுத்த கடனை முறையாகச் செலவு செய்திருந்தால் மீண்டும் கடன்பெறத் தேவையில்லை.

இந்த நிலை தொடர்ந்தால் எமது நாடும் எதியோப்பியாவாக மாறும். இன்று எமது நாடு முகம் கொடுக்கும் சவாலை முறியடிக்க மகிந்த ராஜபக்ஷவுக்கு முடியாது. நாம் சந்திரிகா அரசியலிலிருந்து வெளியேறியிருக்காது விட்டால் விடுதலைப் புலிகள் இயக்கம் ஐ.நாவின் உதவி பெறும் ஒரு அமைப்பாக மாறியிருக்கும்.

நாம் செல்லவுள்ள பயணத்தில் இணையுமாறு மங்கள சமரவீரவையும் அழைக்கின்றோம். விரக்தியுள்ள நிலையிலுள்ள மக்களின் மனதை மாற்றும் பாரிய பொறுப்பு மக்கள் விடுதலை முன்னணிக்கு உண்டு. இலங்கைக்கு புதிய அரசியல் யாப்பு அவசியம். விகிதாசாரத் தேர்தல் முறையை ஒழிக்க நாம் பூரண ஒத்துழைப்பை வழங்குவதுடன் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியும் இல்லாமல் செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் உள்ளோம்.

வாசுதேவ நாணயக்கார, விக்கிரமபாகு கருணாரத்தின போன்றவர்களை நாம் எமது கூட்டணியில் இணைத்துக் கொள்ள மாட்டோம். தகுதியானவர்களுக்கே இடம் கொடுப்போம். பலர் எம்முடன்இணைய் முன்வந்துள்ளனர். அவர்கள் தொடர்பான விபரங்களை நாம் இப்போது வெளியிட மாட்டோம். எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐ.தே.க. பிரதமர் அபேட்சகராக மங்கள சமரவீர போட்டியிடலாம். இதனால் எஸ்.பி. திஸாநாயக்க குழப்பம் அடைந்துள்ளமையை தற்போது அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. புதியதொரு பாதையில் செல்லவே நாம் புதிய கூட்டணியை உருவாக்கவுள்ளோம் என்றார். (ச–5)

# க.பொ.த. (சா/த) பரீட்சைப் பெறுபேறுகளை மீளாய்வு செய்யும் நடவடிக்கை ஆரம்பம்

(கொழும்பு)

கடந்த ஆண்டு நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளை மாகாண மற்றும் மாவட்ட மட்டங்களில் மீளாய்வு செய்யும் நடவடிக்கைகளைப் பரீட்சை திணைக்களம் மேற்கொண்டுள்ளதாகப் பரீட்சை ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க அறிவித்துள்ளார்.

மாகாண ரீதியாக ஒப்பிடும்போது மேல்மாகாணத்தில் இருந்து சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களே விகிதாசார ரீதியாக கூடுதலான அளவில் உயர் வகுப்பில் கல்வி கற்பதற்குத் தகுதி பெற்றுள்ளதாகவும் பரீட்சைத் திணைக்களம் மேற்கொண்டுவரும் ஆய்வின் மூலம் தெரிய வந்துள்ளது.

இம் மாகாணத்திலிருந்து 59.79 சதவீதமான மாணவர்கள் உயர் தர வகுப்பில் கல்வி கற்பதற்குத் தகுதி பெற்றுள்ளனர். இதன் அடுத்தபடியாக வடமேல் மாகாணத்திலிருந்து 52.70 சதவீதமானவர்களும் தென்மாகாணத்திலிருந்து 52.29 சதவீதமானவர்களும் வட மாகாணத்திலிருந்து 51.93 சதவீதமானவர்களும் கிழக்கு மாகாணத்திலிருந்து 48.35 சதவீதமானவர்களும் உயர் தர வகுப்பில் கல்வி கற்பதற்கு தகைமை பெற்றுள்ளனர்.

இதேவேளை கடந்த 5 ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது தேசிய ரீதியாக உயர் தர வகுப்பில் கல்வி கற்கத் தகுதி பெறும் மாணவர்களின் விகிதாசாரம் அதிகரித்து வருவதாகவும் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

2002 ஆம் ஆண்டு 41.51 சதவீதமானவர்களும் 2003 ஆம் ஆண்டில் 44.01 சதவீதமானவர்களும் 2004 ஆம் ஆண்டு 45.04 சதவீதமானவர்களும் 2005 ஆம் ஆண்டு 47.72 சதவீதமானவர்களும் 2006 ஆம் ஆண்டில் 48.70 சதவீதமானவர்களும் உயர் வகுப்பில் கல்வி கற்பதற்குத் தகுதி பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (எ–5)

# விடுதிகளிலிருந்து வெளியேற்றப்பட்ட தமிழர்கள் விவகாரம் தொடர்பில் தொடர்ந்தும் நடவடிக்கை

## மே.ம.முயின் நிதிச் செயலாளர் சுரேஷ் கங்காதரன் அறிக்கை

(கொழும்பு)

கொழும்பு விடுதிகளிலிருந்து தமிழர்கள் வெளியேற்றப்பட்டமை குறித்து சர்வதேச சமூகத்திற்கு எடுத்துக் கூறி வரும் மனோ கணேசன் எம்.பி. இத்தகைய அநீதிகள் தொடர்ந்தும் நடைபெறாதிருப்பதனை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றார் என்று மேலக மக்கள் முன்னணியின் நிதிச் செயலாளர் சுரேஷ் கங்காதரன் தெரிவித்தார்.இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

கொழும்பிலுள்ள விடுதிகளில் தங்கியிருந்த தமிழர்களைக் கடந்த மாதம் 7 ஆம் திகதி பொலிஸார் வெளியேற்றியிருந்தனர். இது பாரிய மனிதஉரிமை மீறலாகும். அரசாங்கத்தின் இந்தச் செயலுக்குப் பல வழிகளிலும் எதிர்ப்பினைத் தெரிவித்த எமது தலைவர் மனோ கணேசன் எம்.பி. இவ்விடயம் குறித்துத் தொடர்ந்தும் சர்வதேசத்திற்குத் தெளிவுபடுத்தி வருகின்றார்.

அதன் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய பாதுகாப்பினைப் பெற்றுக் கொடுக்க மேலக மக்கள் முன்னணி முயன்று வருகின்றது. அத்துடன் நின்றுவிடாது சர்வதேச ஊடகங்களைப் பாதிக்கப்பட்டவர்களுடன் நேரடியாகத் தொடர்புபடுத்தி அவர்களுக்கு நேர்ந்த அவலங்களை வெளியுலகத்திற்கு எடுத்துக்காட்டவும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

இதனைவிட பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத்தினைப் பெற்றுக் கொடுப்பதற்காக சட்டத்தரணிகளின் ஆலோசனைகளையும் பெற்று நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. மேலக மக்கள் முன்னணியின் இத்தகைய செயற்பாட்டிற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ–5)

# சுடப்பட்டவரின் சடலம் பொறுப்பேற்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

ஆவரங்காலில் நேற்று முன்தினம் சுட்டுக் கொல்லப்பட்ட திருமணத் தரகரின் சடலம் உறவினர்களால் அடையாளம் காட்டப்பட்டுப் பொறுப்பேற்கப்பட்டது.

சம்பவத்தில் கொல்லப்பட்டவர் திருமணத் தரகரும் சமாதான நீதிவானுமான அமிர்தலிங்கம் சிவகுமார் (வயது–41) என்ற 4 பிள்ளைகளின் தந்தையென உறவினர்களால் அடையாளம் காண்பித்து சடலம் நேற்றுப் பொறுப்பேற்கப்பட்டது.

மேலும் இவருடன் கூட வந்த மகன் கடத்தப்பட்டார் என செய்திகள் வெளியானபோதும் அதனை குடும்பத்தினர் மறுத்துள்ளனர். அவருடன் சென்ற ஒருவரே கடத்தப்பட்டதாகவும் உறவினர்கள் எவரும் கடத்தப்படவில்லை எனவும் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை குறித்த திருமணத் தரகரின் அடையாள அட்டை, வாகனச் சாரதி அனுமதிப் பத்திரம் மற்றும் மோட்டார் வாகன ஆவணங்கள் இவரிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டதாக விசாரணைகளில் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. (ச–5)

# யாழ்.அரசாங்க அலுவலர்களுக்கென கொண்டு வரப்பட்ட வாகனங்கள் கையளிப்பு

அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட 7 இலகு வாகனங்கள் மற்றும் ஒரு மோட்டார் சைக்கிள் என்பன மாக்ஸ் றுகுணு கப்பலில் யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு வரப்பட்டன. இவ்வாகனங்கள் இராணுவத்தினரால் பொறுப்பேற்கப்பட்டு உத்தியோகபூர்வமாக யாழ்.பாதுகாப்பு நடவடிக்கை தலைமையக தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியினால் யாழ்.அரசாங்க அதிபர் க.கணேஷிடமும் வட மாகாண சுகாதாரப் [illegible]

வாகனங்களின் திறப்புக்கள் அரசாங்க நிறுவனங்களில் சேவை செய்யும் அதிகாரிகளின் தேவைக்காக யாழ்.அரசாங்க அதிபர் க.கணேஷிடமும் வடமாகாண சுகாதாரப் பணிப்பாளர் எஸ்.கேதீஸ்வரனிடமும் கையளிக்கப்பட்டன.

இதேவேளை அரசாங்கத்தினால் தரப்படும் இந்த வாகனங்களை மிகவும் பொறுப்புடன் பாதுகாத்து பாவனையில் ஈடுபடுத்துமாறும் எதிர்வரும் காலங்களில் இதுபோன்று இலகு வாகனங்கள் கிடைக்கக் கூடியதாக உள்ளதாகவும் யாழ் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார். (ச)

# பொருளாளர் பதவியிலிருந்து மங்கள நீக்கப்பட்டார்

(கொழும்பு)

மங்கள சமரவீர சுதந்திரக்கட்சியின் பொருளாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக சுதந்திரக்கட்சியின் உப தலைவர் நிமால் சிறிபால டி சில்வா செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார். அத்துடன் மங்கள சமரவீரவும் சிறிபதி சூரியாராட்சியும் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த நிமால் சிறிபால டி சில்வா சுதந்திரக்கட்சியின் துணைப் பொருளாளராக பெர்னாண்டோபுள்ளே நியமிக்கப்பட்டுள்ளார்.

இவரே இனிவரும் காலங்களில் பொருளாளராகவும் செயற்படுவார் என சிறிபால டி சில்வா மேலும் குறிப்பிட்டுள்ளார். மத்திய குழு தொடர்ந்தும் ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கும் எனவும் ஐக்கிய தேசியக்கட்சியில் யாரும் இணைய மாட்டார்கள் எனவும் அறிவித்துள்ளார். (எ-1)



யாழ்.அரச திணைக்களங்களுக்கான வாகனங்கள் கையளிக்கப்பட்டபோது...

## நியாயமான அரசியல் தீர்வை...

அகதிகளாக மாறி இலட்சக் கணக்கான தமிழ்மக்கள் அல்லலுறுவதற்கு சிங்கள அரசின் இனவாதச் சித்தாந்தமே காரணமாகவுள்ளது. கொழும்பு நகரில் இருந்து தமிழ் மக்களை வெளியேற்ற அரசு எடுத்த இனச் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் அதன் இனவாதச் சித்தாந்தத்தின் நடை முறை வடிவமாகும்.

உலக நாடுகளின் அழுத்தங்களுக்கு பணிந்தே கொழும்பு வாழ் தமிழர்களின் வெளியேற்றத்தை அரசு விலக்கிக்கொண்டது. ஆயினும் மாற்று வழிகளில் தேவையேற்பட்டால் மீண்டும் இதே வழியிலேயே தமிழர்களை இனச்சுத்திகரிப்பு செய்ய அரசு தயங்காது.

அனைத்துலக கண்டனங்கள் எதிர் நடவடிக்கைகள் என்பவற்றிற்கு மத்தியிலும் சிங்கள இராணுவ இயந்திரத்தை பெருமெடுப்பில் விரிவாக்க மகிந்த அரசு முயல்கிறது.

சீனாவில் இருந்து பாகிஸ்தானிலிருந்து நவீன பேராயுதங்களை குவித்து வருகிறது. 50 ஆயிரம் பேரை படைக்குத் திரட்ட மகிந்த அரசு உத்தேசித்துள்ளது. மகிந்த அரசின் போர் முனைப்பை உலக நாடுகள் கண்டித்து எச்சரிக்கைகள் செய்துள்ளன. எனினும் மகிந்த அதனைக் கருத்தில் எடுக்கவில்லை.

இந்த இனவாதச் சித்தாந்த அரசியலை அடித்தளமாகக் கொண்டு சிங்கள அரசிடமிருந்து தமிழ்மக்கள் ஒரு நியாயமான அரசியல் தீர்வைப் பேசிப்பெற முடியும் என்று நினைப்பது சாத்தியமற்றதேயாகும்.

இந்த வரலாற்று உண்மையை இலங்கை இனப்பிரச்சினையில் அக்கறையும் ஆர்வமும் உள்ள உலக நாடுகள் கருத்தில் எடுத்து யதார்த்த பூர்வமாக சிந்திக்கவேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும் ஏன்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## குற்றப்புலனாய்வுத் திணைக்கள இயக்குநரை நாடாளுமன்றுக்கு அழைக்க வேண்டும்

### அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே

(கொழும்பு)

குற்றப்புலனாய்வுத் திணைக்கள இயக்குநரை நாடாளுமன்ற விசாரணைக்கு அழைக்க வேண்டுமென்று அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அன்று ஜெயராஜ் பேசியதாவது; ஐக்கிய தேசியக்கட்சியின் உறுப்பினர் ஜோன் அமரதுங்கவிற்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் தொடர்பாக உரிய விசாரணைகளை ஏன் நடாத்தவில்லை என்று விளக்கமளிக்க குற்றப்புலனாய்வுத் திணைக்கள இயக்குநரை நாடாளுமன்றத்திற்கு அழைத்துவர சபாநாயகர் லொக்கு பண்டார உத்தரவிட வேண்டும்.

இத்தகைய அச்சுறுத்தல்கள் இருப்பதாகக்கூறி அரசாங்கத்தின் நன் மதிப்பை சீர்குலைக்க எதிர்க்கட்சியினர் திட்டமிட்டுள்ளனர். ஆகையால் இத்தகைய அச்சுறுத்தல்களின் பின்ன்ணியில் யார் உள்ளது என்பது கண்டறியப்படவேண்டும் என்றார்.

முன்னதாக நாடாளுமன்றில் பேசிய சபா நாயகர் லொக்குபண்டார, ஜோன் அமரதுங்கவின் அச்சுறுத்தல் முறைப்பாடு குறித்து தொடர்ந்து விசாரணை நடாத்த தேவையில்லை என்று குற்றப்புலனாய்வுத் திணைக்கள இயக்குநர் தமக்கு தெரியப்படுத்தியுள்ள்ரார் என்றார். (ச)

## கிழக்கில் தேர்தல் நடத்தினால்...

நடாத்துவது என்பது புத்தி பூர்வமானதல்ல.

வடக்கு -கிழக்கில் எமது தேவாலயம் இயங்குவதால் தொடக்கத்திலிருந்து விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் என்று எம்மைக் கூறி வருகின்றனர். அரசியல் வாதிகள் மீது வடக்கு-கிழக்கு மக்கள் அதிருப்தியடைந்துள்ளனர்.

வாக்குறுதிகளையும் ஒப்பந்தங்களையும் தூக்கி எறிகின்றவர்களாக அரசியல்வாதிகள் உள்ளனர். வடக்கு-கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் மீதான இனப்பாகுபாடு என்பது ஒழிக்கப்படவேண்டும்.

மகிந்த அரசாங்கம் அமைத்திருக்கும் அனைத்துக் கட்சிக் குழுவினால்கூட இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டத்தை முன்வைக்கமுடியும் என்று நான் நினைக்கவில்லை. தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களினது அடிப்படை உரிமைகள் மதிக்கப்படவேண்டும்.

அவர்களுக்கான அதிகாரப் பகிர்வு அளிக்கப்படவேண்டும். அதற்காக நான் பிரிவினைவாதம் பேசுவதாக கருதக்கூட[illegible] ஆட்கடத்தல் சம்பவங்கள் என்பவை பணத்திற்காக மேற்கொள்ளப்படுகின்றன.

இதில் ஆயுதம் தாங்கிய குழுக்களுக்கு தொடர்பு உள்ளன. மக்களின் உளவியல் ரீதியாக சித்திரவதை செய்கிற நோக்கத்துடனும் இத்தகைய கடத்தல் சம்பவங்கள் நிகழ்த்தப்படுகின்றன. சுதந்திரமாக நடக்கவோ பேசவோ பணி செய்யவோ முடியாத ஒருவித கொடூர நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

ஆயுதம் தாங்கிய குழு யாராக இருந்தாலும் அவர்களை அழிக்காமல் அமைதி குறித்து பேசவும் முடியாது. அமைதியை உருவாக்கவும் முடியாது. பயங்கரவாதத்தின் ஆணிவேர் குறித்து அரசாங்கம் ஆராய வேண்டியது அவசியமாகும் என்றார் அவர். (எ-1)

## ஆணைக்குழுவின்...

பக்கச்சார்பாக இடம் பெறுவதாகவும் சுட்டிக் காட்டியிருந்தார்.

மேலும் இவ் விசாரணை ஆணைக்குழுவிற்கு உதவி அளித்துவரும் சட்டமா அதிபர் திணைக்களத்தையும் கடுமையாக விமர்சித்திருந்தார். இதற்குப் பதிலளிக்கும் வகையில் சட்டமா அதிபர் சி.ஆர்.டி.சில்வா, பகவதியின் குற்றச்சாட்டுக்கு மறுப்புத் தெரிவித்து எழுதிய காட்டமான கடிதத்தையடுத்து பிரபலமான நபர்களைக் கொண்ட சர்வதேச சுயாதீன ஆணைக்குழுவிற்கும் இலங்கை அரசாங்கத்திற்குமிடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

இதனையடுத்து ஜனாதிபதியின் செயலாளர் மேற்கொண்ட முயற்சியை அடுத்து சர்வதேச சுயாதீன ஆணைக்குழுவின் தலைவர் பகவதி மீண்டும் தமது செயற்பாடுகளை மேற்கொள்ள இணக்கம் தெரிவித்துள்ளதாக ஹிந்துஸ்தான் டைம்ஸ் தெரிவித்துள்ளது.

இதனையடுத்து ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவிற்கு உதவும் அதனது செயற்குழுக் கூட்டங்களில் பங்கேற்கவும் தமது குழுவின் உறுப்பினர் ஒருவரை அனுப்புவதற்கு பகவதி இணக்கம் தெரிவித்துள்ளதாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-5)

## சமாதான அனுசரணை பணிக்கு...

நோர்வே அனுசரணையாளர்கள் விடுதலைப்புலிகளுக்கு சார்பாக செயல்படுவதாக அரசாங்கமும் தென்னிலங்கையின் கடும்போக்காளர்களும் கருதுவதால் நோர்வேயின் ஒத்துழைப்புடன் இணைத் தலைமை நாடுகள், அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் அனுசரணைப் பணியை மேற்கொள்வதற்கு தீர்மானித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இதேவேளை நோர்வே அனுசரணையாளர்கள் இலங்கை அமைதி முயற்சிகளில் மென்போக்கை கடைப்பிடித்து வந்துள்ளமையே முறுகல் நிலை நீடிப்பதற்கு காரணம் என்று இராஜதந்திர தரப்புகள் கருதுவதாகவும் இதன் காரணமாகவே நோர்வேயை ஓரம் கட்டிவிட்டு முழு வீச்சுடன் அமைதி முயற்சிகளை ஆரம்பிக்க இணைத்தலைமை நாடுகள் விரும்புவதாகவும் இராஜதந்திர தரப்பு தகவல்கள் தெரிவித்துள்ளன.

இணைத் தலைமை நாடுகளின் சார்பில் பிரித்தானியான அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதற்கான சாத்தியங்கள் காணப்படுவதாகவும் எனினும் ஜேர்மனியும் இலங்கை அமைதி முயற்சிகளில் தீவிர ஈடுபாட்டை வெளிப்படுத்தி வருவதால் ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பில் ஜேர்மனியும் இணைத் தலைமைகளின் சார்பில் பிரித்தானியாவும் கூட்டாக அமைதி முயற்சிகளுக்கு தலைமை தாங்கலாம் எனத் தெரியவந்துள்ளது.

இதேவேளை பிரித்தானிய அரசாங்கம் விடுதலைப்புலிகளை தடைசெய்துள்ளமையால் அந்த நாட்டின் அனுசரணையை விடுதலைப்புலிகள் நிராகரிக்கக்கூடும் என்றும் இராஜதந்திர தரப்புகள் கருத்து வெளியிட்டுள்ளன.

அடுத்த மாத முற்பகுதியில் ஆரம்பிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படும் புதிய அமைதி முயற்சிகளுக்கு முன்னோடியாக விடுதலைப்புலிகள் மீதான ஐரோப்பிய ஒன்றிய தடை நீக்கப்படும் வாய்ப்புகள் இருப்பதாக அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்கினால் ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பில் பிரித்தானியா அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதில் சிக்[illegible] நிலை ஏற்படாது என்று மேற்குலக இராஜதந்திரிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ். பிரட்ஸ்கர் மற்றும் பிரித்தானிய தூதுவர் டொமினிக் சில்கொட் ஆகியோர் விரைவில் வன்னிக்கு விஜயம் செய்து அமைதி முயற்சிகளின் புதிய ஏற்பாடுகள் குறித்து விடுதலைப்புலிகளுடன் கலந்துரையாடவுள்ளதாக தெரியவந்துள்ளது.

இதேவேளை ஜேர்மனியின் தூதுவர் யூஜின வீத், நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கருடன் இலங்கையின் அமைதி முயற்சிகளை முன்னெடுப்பது குறித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் நோர்வே தரப்பை ஓரம்கட்டும் விதமான மேற்குலகுகளின் அரசியல் அழுத்தங்களுக்கு விடுதலைப்புலிகளின் பிரதிபலிப்புகள் எவ்வாறு அமையும் என்பதில் தொடர்ந்தும் இணைத்தலைமைகள் சந்தேகம் கொண்டுள்ளதாக தெரிய வருகின்றது.

எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் நோர்வே அனுசரணையாளர்களை முற்றாக அமைதி முயற்சிகளில் இருந்து வெளியேற்றுவதற்கு விடுதலைப்புலிகள் விரும்பமாட்டார்கள் என்பதால் புதிய அமைதி முயற்சிகள் அறிவிக்கப்படாத நிகழ்ச்சி நிரலின் கீழ் இடம்பெறும் வாய்ப்புகள் அதிகம் என்று அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (எ-1)


# மரண அறிவித்தல்

## திருமதி பரமகுரு செல்லம்மா

மீசாலையைப் பிறப்பிடமாகவும் அல்லாரையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமகுரு செல்லம்மா நேற்று சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமகுருவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பெரியராசா தம்பதியினரின் அன்பு மகளும், அல்லாரையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான அமரசிங்கம் தம்பதியரின் பாசமிகு மருமகளும் அன்னலெட்சுமி, ராசலெட்சுமி, நாகராசா (சுவிஸ்), வேதநாயகி, பரமராசா (பிரான்ஸ்), நவநீதவல்லி, புஸ்பராணி ஆகியோரின் பாசமிகு தாயாரும்,

கணேசலிங்கம் (இளைப்பாறிய கிளை முகாமையாளர்), காலஞ்சென்ற கிருஷ்ணானந்தன் மற்றும் விமலாதேவி (சுவிஸ்), சாம்பசிவம், தங்கேஸ்வரி, பரமசிவம் (கிராம உத்தியோகத்தர் மீசாலை கிழக்கு), காலஞ்சென்ற யோகசுந்தரம் ஆகியோரின் அன்பு மாமியாரும்,

மீனலோஜினி (ஹொலண்ட்), மிர்னாலினி, பார்த்தீபன் (ஹொலண்ட்), இளந்திரையன் (நோர்வே), இளங்குமரன் (நோர்வே), துஷ்யந்தினி (ஜேர்மனி), ராஜகிருஷ்ணன் (இந்தியா), சாமினி (இந்தியா), சிறிதரன் (கனடா), தர்சினி (சுவிஸ்), நரேஷ் (சுவிஸ்), ரூபனா (சுவிஸ்), காலஞ்சென்ற காண்டீபன் மற்றும் வத்சலா, சாரங்கன், தர்ஷா, சிவசுதன் (ஆசிரியர், மட்டக்களப்பு), சிவாஜினி (விவசாய பீடம் யாழ்.), சிவநந்தினி (லண்டன்), சிவநிரூபன், செந்தூரன் (லண்டன்), பிரதீபா, கஜீபன், ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.07.2007 (இன்று) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அல்லாரையில் நடைபெற்று பூதவுடல் கொப்புலவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: மருமக்கள்;
க.கணேசலிங்கம்,
செ.சாம்பசிவம், நா.பரமசிவம் (G.S)

அல்லாரை வடக்கு,
கொடிகாமம்.

(கீ-208)



# கற்சுமி வெளியீடு

தரம் 1 முதல் O/L வரை தெளிவான கணனி அச்சமைப்பில் இரண்டாம் தவணைப் பரீட்சை வினாத்தாள்கள் பெறலாம்.

கற்சுமி கல்வி நிறுவனம்
166, நாவலர் வீதி யாழ்.


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ன் [illegible] இல.0[illegible] இரண்டாம் ஒழுங்கை, பிறவுன் றோட், [illegible] 08.07.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.